உ

கடவுள் துணை.

# ரெட்டிக்குடியேசல்.



சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1922,

உ

கடவுள் துணை.

# ரெட்டிகுடி யேசல்.

## வெண்பா.

மாசின் முருகேசருக்கு மாது தெய்வானைக்கு
மோசனேரிட்டதையா னியம்பவே-காசினியிற்
செஞ்சடிலநின்றவெழிற் றிகழ்கயமாமுகதேவன்
கஞ்சமலர்த்தா திணையே காப்பு.

காசினியோர்புகழுமெட்டிக்குடி வேலவா
கதவைத்திறக்குமே சற்பாட-எழில்
கதவைத்திறக்குமே சற்பாட 1

மூஷிகவானமீதேறும்விநாயகன்
முளரிமலரடியேகாப்பு-எழில்
முளரிமலரடியே காப்பு. 2

செய்யவடிவேலேந்துமுருகாவருகிற
சேதியறிந்தாளந்தமாது-தெய்வ
யானையறிந்தா ளப்போது 3

பரிவுடன்வடிவேலர் முருகர்வாராரென்று
படுக்கென்றடைத்தா ளிப்போது-கதவை
சடுக்கென்றடைத்தா ளிப்யோது 4

அடைத்தகதவுந்தெரியாமலே முருகேசர்
ஆசையினாலேமதிமயங்கியே-யவள்
ஆசையினாலே மதிமயங்கியே 5

தடதடவென்று விரைவினிலேவந்து
தட்டினார்கையினாற்றானே-கதவை
தட்டினார்கையினாற்றானே, 6

செண்பகவதியடி கதவைத்தத்தட்டியதட்டி
திறவென்றுசொன்னவராரோ-இந்த
தெருவினில் வந்தவராரோ. 7

எந்தன் கண்மணியே யறியாயோ-நான்தான்
எட்டிக்குடிவேலவனானே-பெண்ணே
எட்டிக்குடிவேலவனானே. 8

எட்டிக்குடியைவிட்டு விரைவினிலிரவிலே
எப்படிவந்தீர்சொல்லுஞ்சுவாமி-நீர்
எப்படிவந்தீர் சொல்லுஞ்சுவாமி 9

மாதனின்முகமதியொளியைக்கொண்டு
வந்தரசேயிந்தவேளை-எழில்
மாதரசேயிந்தவேளை. 10

இந்தவேளையிருவேளையிருகாதவழிநடந்து
எவ்விதம்நடந்துவந்தீரோ-சுவாமி
எவ்விதம்நடந்துவந்தீரோ சுவாமி 11

கட்டழகிவுன்னை மனதில்நினைத்தபோதே
காதவழியுமரைநாழியே-யிரு
காதவழியு மரைநாழியே 12

அரைநாழியும்மைவிட்டுப்பிரியாளோ அந்நவள்ளி
அறியாமலோடிவந்தீரோ-அவளுக்குத்
தெரியாமலோடிவந்தீரோ 13

அந்தவள்ளியைவிட்டு உந்தன்முகத்தைக்காண
ஆசைகொண்டுதேடிவந்தேன் பெண்ணே
யாசைகொண்டுகாணவந்தேன். 14

காணவந்ததிலென்ன வாயிரமாகவே
கைப்பொருள்கொண்டுவந்தீரோ-சுவாமி
காணிக்கைகொண்டுவந்தீரோ 15

வேணுமென்றதையெல்லா நானிங்கேதருகிறேன்
விறைவுடனேசொல்லுவாயே-பெண்ணே
விரைவுடனேசொல்லுவாயே 16

சொல்லுவதுமில்லையுமது பொருளும்வேண்டாம்
துரிதத்தில்போவாய்நேயாள்வீடே சுவாமி
துரிதத்தில்போவாய்நேயாள்வீடே 17

நேசமில்லாதவள்போலுநீபேசுறாய்
நித்திரைமயக்கமோ பெண்ணே-உனக்கு
நித்திரைமயக்கமோ 18

நித்திரைவிட்டுநீர் வருவீரென்று
நினைத்திருப்பாளேவள்ளி போம்போம்சுவாமி
நினைத்திருப்பாளேவள்ளி போம்போம் 19

போமென்றுநீர்சொல்ல ஞாயமல்லவேநாம்
போனாலென்னகெட்டுப்போகும்-பெண்ணே
போனாலென்ன கெட்டுப்போகும 20

கெட்டுப்போகாதந்த சஷ்டக்கல்விகளெல்லாங்
கேட்பவரார்நீர்சொல்லும்சுவாமி-இங்கு
கேட்பவரார்சொல்லும் சுவாமி 21

கேட்டுச்சொல்லியேமுன்னை யாரடிக்கிறீரிப்போ
கேவலமெனையிகழாதே-பெண்ணே
கேவலமெனை யிகழாதே 22

இகழவும்பேசவு மெனஞலாகாதந்த
இனியவள்ளிக்கே பொசகுந்தானே-சுவாமி
இனியவள்ளிக்கே யொக்குந்தானே. 23

ஒக்கவெனையணைந்தாலுன்னையினிப்பிரியேன்
வுறுதிச்சொன்னேன் மண்டலமறிய-பெண்ணே
உறுதிங்சொனனேனமண்டலமறிய 24

மண்டலம்புழகவடிவேலேந்து முருகரே
வார்த்தைபழக்கவந்தீரோ பேர்மகபாம்
வார்த்தைபழக்கவந்திரோ 25

வார்த்தைபழகிடகான் வல்லவனல்லவுன்
மனதிற்கோபஞ்செய்யாதேபெண்ணே
மனதிற்கோபஞ் செய்பாதே. 26

போதும்போதுமிந்த வுபசாரவார்த்தைசொல்
போதிக்கவந்தையோநீர்-சுவாமியிப்போது
போதிக்கவந்தையோநீர் சுவாமி 27

கன்னியுன்மனமிரங்கா தென்னவிரு
காலுநோகுதடி கண்ணேயெந்தன்
காலுநோகுதடி பெண்ணே. 28

முன்மிதியடிமுனேமேலே நிற்பவர்க்குக்கா
லுறுத்து மோவாயப்படிதானே-சுவாமி
வுறுத்துமோ வாயப்படிதானே 29

மரகதமேகல்ல மயிலேகுயிலேயினி
வந்தகதவைத்திறவெனயே-விரைவாய்
வந்தகதவைத்திறப்பாயே 30

கதவைத்திறவெனவே தொந்தரையென்செய்வீர்
கனதனமென்னகொண்டுவந்தீர்-சுவாமி
கனதனமென்னகொண்டுவந்தீர் 31

கொண்டகுடியினமாந்தர் காணிக்கையாகவைத்த
கொலுசயிருக்கிறதுதானே-பெண்ணே
கொலுசயிருக்கிறது தாரேன் 32

பஞ்சணைமெத்தையின்மேற் கொஞ்சவேனித
பாதத்திலிட்டழகைப்பாரும்-சுவாமி
பாதத்திலிட்டழகைப்பாரும் 33

தைபூசந்தனில்மாந்தர் காணிக்கையாகவைத்த
தண்டையுனக்கிப்போதாரேன்-பெண்ணே
தண்டையுனக்கிப்போது தாரேன் 34

வைப்பாட்டியுனக் கெவனாகிலுந்தானிருந்தால்
வைத்தவட்காலுக்குபாரும்-சுவாமி
வைத்தவட்காலுக்கப்பாரும் 35

சித்ராபருவத்திற்சேர்த்துவைத்திருக்கிற
திகழுமணித்தாழ்வடந்தாரேன்-பெண்ணே
திகழுமணித் தாழ்வடந்தாரேன் 36

தேவதேவனேயிந்த வுருப நகைகளை
தேடியெடுத்துவந்தீரே-சுவாமி
தேடியெடுத்து வந்தீரே, 37

இந்திராலோகத்துக்கு வெள்ளையானை தந்திருக்குது
இதனையுனதுகண் ணூர்பாராய்-பெண்ணே
இதனையுனது கண்ணூற்பாராய் 38

கண்ணினூற்பார்ப்பதேன வெள்ளையானையும்
வையப்பேர்காசினியிற் படைத்தோரார்-சுவாமி
இக்காசினியிற்படைத்தோரார்தானே 39

இந்தக்கதவுதன்னை திறக்கவேமந்திர
மிருக்கிறதென்னிடத்திற் பாராய்-பெண்ணே
யிருக்கிறதென்னிடத்திற் பாராய். 40

இட்சணையிக்கதவை திறப்பீரேயாகிலும்மை
இன்பமுடனணைவேன் சுவாமி-இன்று
இன்பமுடனணைவேன் சுவாமி 41

சிந்தையிற்பஞ்சாட்சரந்தன்னை நினைத்தவுடன்
திறந்ததுவக்கதவுதானே-மிக
திறந்தது வக்கதவுதானே. 42

திறந்தவுடனேவானோர் பூமழைபெய்யவும்
தெய்வயானையை யணைந்தாரே-சுவாமி
தெய்வயானையை யணைந்தாரே. 43

ரெட்டிகுடி யேசல்

முற்றிற்று.